Install app
Premium
Search audiobook



# அமுல் நிறுவனத்தின் இயற்கை உரங்கள்... மஞ்சள் சாகுபடியில் பரிசோதனை!

ம.பா.இளையபதி
ரமேஷ் கந்தசாமி

4 Min Read

**கள ஆய்வு**

Published: 25 Apr 2025 2 AM
Updated: 25



சண்முகபெருமாள்

Get 30 days free Trial on App

Join Our Channel
1 Comments
Share



**அமுல் நிறுவனத்தின் இயற்கை உரங்கள்... மஞ்சள் சாகுபடியில் பரிசோதனை!**

Listen to Vikatan stories on our AI-assisted audio player

குஜராத் மாநிலத்தில் இயங்கி வரும் பால் கூட்டுறவு நிறுவனமான அமுல் (AMUL- Anand Milk Producers Union Limited) நிறுவனம், பால் மற்றும் பால் சார்ந்த பொருள்கள் உற்பத்தி மற்றும் விற்பனையில் செயல்பட்டு வருகிறது. இந்நிறுவனம், புதிய முயற்சியாக, அப்பகுதி விவசாயிகளிடமிருந்து மாட்டுச் சாணம் மற்றும் சிறுநீரைக் கொள்முதல் செய்து, இயற்கை உரங்கள் தயார் செய்யும் பணியில் இறங்கியுள்ளது. அந்த உரங்களை, தமிழ்நாடு உள்ளிட்ட 5 மாநிலங்களில் விநியோகம் செய்து வருகிறது, சென்னையைச் சேர்ந்த தனியார் நிறுவனம்.

ஈரோடு மாவட்டம், கோபிசெட்டி பாளையம் அருகே உள்ள காசிபாளையத்தில் சண்முகபெருமாள் என்பவர் தோட்டத்தில் சோதனை முயற்சியாக, அமுல் நிறுவனத்தின் இயற்கை உரங்களைப் பயன்படுத்தி மஞ்சள் பயிரிடப்பட்டுள்ளது. இதுகுறித்து அறிந்துகொள்ள, ஒரு காலைப்பொழுதில் அந்தத் தோட்டத்துக்குச் சென்றோம்.

நம்மிடம் பேசிய சண்முகபெருமாள், “அப்பாவுக்கு விவசாயத்துல ஈடுபாடு அதிகம்... நான் பொறியியல் பட்டப் படிப்பு முடிச்சிட்டு, அட்டைப்பெட்டி தயாரிக்கும் தொழிற்சாலை தொடங் விவசாயத்தைக் கவனிக்க முடியாததால, எங்க குடும்பத்துக்குச் சொந்தமான 15 ஏக்கர் நிலத்தைக் குத்தகைக்கு விட்டுவிட்டேன்.

Get 30 days free Trial on App



மஞ்சள் அறுவடையில்

### இயற்கை விவசாயத்துக்கு மாறினேன்...

2012-ம் வருஷம், அப்பா மரணம் அடைஞ்சார். அவரோட இழப்பு என் மனசுல மிகப்பெரிய பாதிப்பை ஏற்படுத்துனுச்சு. அவர், மிகவும் நேசிச்ச விவசாயத்தைக் கைவிட்டுவிடக் கூடாதுனு முடிவெடுத்தேன். குத்தகைக்கு விட்டிருந்த 15 ஏக்கர் நிலத்தை மீட்டு, விவசாயம் செய்ய ஆரம்பிச்சேன். ரசாயன இடுபொருள்கள் பயன்படுத்தி நெல், வாழை, கரும்பு, மஞ்சள் உள்ளிட்ட பயிர்கள் சாகுபடி செஞ்சுகிட்டு இருந்தேன். ரசாயன நச்சுத்தன்மை இல்லாத, உணவுப் பொருள்களை உற்பத்தி செய்யணும்ங்கற விழிப்புணர்வு ஏற்பட்டதால, 2016-ம் வருஷம், இயற்கை விவசாயத்துக்கு மாறினேன்” எனத் தெரிவித்தவர், தற்போது, அமுல் நிறுவனத்தின் இயற்கை உரங்களைப் பயன்படுத்தி, மஞ்சள் பயிர் செய்த அனுபவம் குறித்துப் பேசினார்.

குஜராத்தைச் சேர்ந்த அமுல் நிறுவனம், இப்ப, புதிய முயற்சியா இயற்கை உரங்கள் உற்பத்தியில ஈடுபட ஆரம்பிச்சிருக்குறதாவும், அதை விவசாயிகளோட தோட்டத்துல பயன்படுத்தி, சோதனை அடிப்படையில பயிர்களை விளைவிக்கத் திட்டமிட்டி ருக்குறதாவும், என் தொழில் நிறுவனங்களின் மூத்த ஆலோசகர் கணேசன் சொன்னார்.

அமுல் நிறுவனம், குஜராத் மாநில விவசாயிகள்கிட்ட இருந்து மாட்டுச் சாணம் மற்றும் சிறுநீரைக் கொள்முதல் பண்ணி, உரங்கள் தயார் செய்றதுனால, அந்தப் பகுதி விவசாயிகளுக்கு வருமானம் கிடைக்குது. அந்த நிறுவனம், விற்பனை செய்யக்கூடிய பால் மற்றும் பால் மதிப்புக்கூட்டப்பட்ட பொருள்கள் தரமானதா இருக்குறது Get 30 days free Trial on App கயைப் பெற்றிருக்கு. அதனால, அமுல் நிறுவனத்தோட உரங்களை என்னோட தோட்டத்துல பயன்படுத்தி, மஞ்சள் பயிர் செய்ய விரும்பினேன். உடனே, அமுல் இயற்கை உரத்தை தமிழ்நாட்டில விநியோகம் செய்யும்

நிறுவனத்தோட அலுவலர்கள்கிட்ட பேசினேன். என்னோட ஆர்வத்தைப் புரிஞ்சுகிட்டு, உடனே சம்மதம் தெரிவிச்சாங்க. அதுக்காக ஒரு ஏக்கர் 20 சென்ட் நிலத்துல பரிசோதனை திடல் அமைச்சேன்.



சண்முகபெருமாள்

**பூச்சி, நோய்த்தாக்குதல் இல்லை...**

அந்த நிலத்துல கடந்த வருஷம் ஜூலை மாசம் மஞ்சள் பயிரிட்டேன். உழவு, நடவு, உர மேலாண்மை உள்ளிட்ட எல்லாப் பணிகளையும் அந்த நிறுவனத்தினரே கவனிச்சுக்கிட்டாங்க. நல்லா விளைஞ்சிருக்கு. பொதுவா, மஞ்சள் சாகுபடியைப் பொறுத்தவரைக்கும் வேர் அழுகல் நோயை சமாளிக்குறது சவாலானது. அமுல் நிறுவனத்தோட இயற்கை உரங்களைப் பயன்படுத்தினதுனால, என் தோட்டத்துல உள்ள மஞ்சள் பயிர்ல, எந்த ஒரு நோய்த் தாக்குதலோ, பூச்சித் தாக்குதலோ ஏற்படல. வழக்கத்தைவிடவும், இந்த முறை, கிழங்குகள் நல்லா பெருத்து திரட்சியா இருக்கு” எனத் தெரிவித்தார்.

அமுல் இயற்கை உரங்களை தமிழ்நாட்டில் விநியோகம் செய்யும், தனியார் நிறுவனத்தின் உழவியல் வல்லுநரான செந்தில்வேல் நம்மிடம் பேசுகையில், “மாட்டுச் சாணத்தையும், சிறுநீரையும் நொதித்தல் முறையில் மதிப்புக்கூட்டி, அமுல் நிறுவனத்தினர், இந்த இயற்கை உரங்கள் தயார் செய்றாங்க. 5 வகையான நுண்ணுயிர்கள் மூலப்பொருள்களாகப் பயன்படுத்தியும் திரவ உரங்கள் தயார் செய்றாங்க. இந்த உரங்களைப் பயன்படுக்கி, பயிர்கள் சாகுபடி செஞ்சா, நிலத்துல நுண்ணுயிர்கள் அதிக அளவு உற்பத்

Get 30 days free Trial on App

**நிறைவான மகசூல்...**

இதன் மூலம் பயிர்களுக்குத் தேவையான தழைச்சத்து, மணிச்சத்து, சாம்பல் சத்து, ஆர்கானிக் கார்பன், அமினோ அமிலம் உள்ளிட்டவை போதுமான அளவு கிடைக்குறதுனால நிறைவான மகசூல் கிடைக்குது. சண்முகபெருமாள் தோட்டத்துல சோதனை அடிப்படையில ஒரு ஏக்கர் 20 சென்ட் நிலத்துல மஞ்சள் பயிர் செஞ்சோம். அடியுரமா... கார்பன் சத்துள்ள அமுல் கோல்டு... பாஸ்பரஸ் சத்துள்ள அமுல் பவர்... வேர் வளர்ச்சியை வலுப்படுத்தும் ரூட் எக்ஸ்... தழைச்சத்து, சாம்பல் சத்து, மணிச்சத்து நிறைஞ்ச அமுல் என்.பி.கே. இயற்கை திரவ உரம்... இந்த நான்கு வகையான உரங்களையும் கலந்து கொடுத்தோம். இலைவழி ஊட்டமா... திரவ நிலையிலான அமுல் ரிச் பிளஸ், பாஸ்போ ரிச் ஆகிய உரங்கள் தெளிச்சோம்.

மண் வளத்தை விரைவாக மேம்படுத்தக் கூடிய நுண்ணுயிர்களும், அத்தியாவசிய ஊட்டச்சத்துகளும் அமுல் கோல்டு உரத்துல நிறைஞ்சிருக்கு. மண்ணோட கார அமிலத்தன்மையைச் சமநிலைப்படுத்தக் கூடிய வேலையையும் அது செய்யுது. மற்றொரு அடியுரமான, அமுல் பவர் பிளஸ் உரம்... நிலத்துல பாஸ்பரஸ் சத்தை மேம்படுத்தி, மண்ணின் நீர்ப்பிடிப்புத் திறனை அதிகப்படுத்துது.

அமுல் ரூட் எக்ஸ் உரம், பயிர்களோட வேர் வளர்ச்சியை அதிகப்படுத்தும் பணியைச் செய்யுது. அதனால, வேர் மண்டலத்தின் பரப்பு விரிவடையுது. அமுல் என்.பி.கே இயற்கை திரவ உரம், உயிர்வேதியியல் செயல்முறைகள் மூலம் நைட்ரஜன், பாஸ்பரஸ், பொட்டாசியம் சத்துகளை நிலைநிறுத்தக்கூடிய வேலையைச் செய்யுது. பயிர்களோட வளர்ச்சிக்குத் தேவையான, ஆர்கானிக் கார்பன் முழுமையாகக் கிடைக்க, திரவ வடிவிலான ரிச் பிளஸ் உரம், முக்கிய பங்களிப்பு செய்யுது. அத்தியாவசிய ஊட்டச்சத்துகள் மற்றும் நுண்ணூட்டச் சத்துக்கள் பயிர்களுக்குக் கிடைக்கவும், வேர் வளர்ச்சியைத் துரிதப்படுத்தவும் பாஸ்போ ரிச் உரம், வேலை செய்யுது.

விவசாயி சண்முகபெருமாள் நிலத்துல, 40 சென்ட் பரப்புல அமுல் உர களப் பரிசோதனை செய்தோம். இந்த நிலத்துல மஞ்சள் சாகுபடி செய்ய... 250 கிலோ அமுல் கோல்டு உரம், 125 கிலோ அமுல் பவர் பிளஸ் உரம், 2.5 கிலோ ரூட் எக்ஸ், அரை லிட்டர் என்.பி.கே திரவம் உரம் கலந்து அடியுரமா கொடுத்தோம். மஞ்சள் விதைப்பு செஞ்சதுல இருந்து 3-வது மாசம், 10 லிட்டர் தண்ணீருக்கு 50 மி.லி வீதம் ரிச் பிளஸ் திரவ உரம் கலந்து இலைவழி ஊட்டமா தெளிச்சோம். 4-வது மாசம், 10 லிட்டர் தண்ணீருக்கு 30 மி.லி வீதம் பாஸ்போ ரிச் திரவ உரம் கலந்து தெளிச்சோம். 6-வது மாசம், 10 லிட்டர் தண்ணீருக்கு 30 மி.லி ரிச் பிளஸ் திரவம் கலந்து (இரண்டாவது முறை)தெளிச்சோம்.

play

செடிகள், நல்லா ஆரோக்கியமாக வளர்ந்து வந்துச்சி. எந்த ஒரு பூச்சித் தாக்குதலோ... இலை அழுகல், வேர் அழுகல் உள்ளிட்ட நோய்த் தாக்குதல்களோ இல்லை. உர மேலாண்மைக்கு 6,500 ரூபாய் செலவாகி யிருக்கு. மஞ்சள், 8 மாச பயிர்ங்கறதுனால, உர செலவு 6,000 ரூபாயை தாண்டுது. நெல், காய்கறிகள் உள்ளிட்ட பயிர்களுக்கு அமுல் இயற்கை உரங்கள் பயன்படுத்துறதா இருந்தா, 40 சென்ட் (சுமார் அரை ஏக்கர்) பரப்புக்கு அதிகபட்சம் 3,000-4,000 ரூபாய்தான் செலவாகும்” என்று சொல்லி முடித்தார்.

தொடர்புக்கு,

சண்முகபெருமாள், செல்போன்:9360

Get 30 days free Trial on App

செந்தில்வேல், செல்போன்:98432 92086




செந்தில்வேல்

**கூடுதல் மகசூல் கொடுத்த அமுல்..!**

மஞ்சள் சாகுபடியில் கிடைத்துள்ள மகசூல் குறித்து நம்மிடம் பேசிய விவசாயி சண்முகபெருமாள், “மொத்தம் ஒரு ஏக்கர் 20 சென்ட் பரப்புல மஞ்சள் சாகுபடி செஞ்சேன். சோதனை அடிப்படையில மூன்று பிரிவுகளா பிரிச்சு உரங்கள் கொடுத்தோம். அமுல் உரங்கள் பயன்படுத்தி மஞ்சள் சாகுபடி செஞ்ச 40 சென்ட் பரப்புல பசுமஞ்சள் 5,582 கிலோ (விரலி மஞ்சள் 4,350 கிலோ, குண்டு மஞ்சள் 1,232 கிலோ) மகசூல் கிடைச்சுருக்கு. இதைப் பதப்படுத்தினா 930 கிலோ கிடைக்கும். அதாவது, 6-ல் 1 பங்கு பதப்படுத்திய மஞ்சள் கிடைக்கும்.

அடுத்து, குப்பை உரம், மாட்டு எரு, கடல்பாசி உரம், உயிர் உரங்கள் பயன் படுத்தி மஞ்சள் சாகுபடி செஞ்ச 40 சென்ட் பரப்புல பசுமஞ்சள் 4,117 கிலோ (விரலி மஞ்சள் 3,130 கிலோ, குண்டு மஞ்சள் 987 கிலோ) மகசூல் கிடைச்சிருக்கு. ரசாயன உரங்கள் பயன்படுத்தி சாகுபடி செஞ்ச, 40 சென்ட் பரப்புல பசுமஞ்சள் 2,983 கிலோ (விரலி மஞ்சள் 2,260 கிலோ, குண்டு மஞ்சள் 723 கிலோ) மகசூல் கிடைச்சிருக்கு. மற்ற உரங்கள் பயன்படுத்தின பகுதிகளை விடவும், அமுல் உரங்கள் பயன்படுத்தின பகுதியில கூடுதல் மகசூல் கிடைச்சுருக்கு” என தெரிவித்தார்.

**இதில் பின்னூட்டம் இடுபவர்களின் கருத்துகள் அவரவர் தனிப்பட்ட கருத்து, விகடன் இதற்கு பொறுப்பேற்காது.**

Get 30 days free Trial on App

What is your reaction?

Powered by Vuukle

| Happy | Love | Rofl | Sad | Angry | Unmoved |
|---|---|---|---|---|---|
| 0% | 0% | 0% | 0% | 0% | 0% |

அமுல் (AMUL) நிறுவனம் எங்கு செயல்படுகிறது?

- மும்பை
- குஜராத்
- பஞ்சாப்
- தமிழ்நாடு

6

TM

Comment (1)

V VuukleUser

Write a comment

GIF Tamil Submit

Sort by Latest

P **Pradeep** Apr 29

இந்த உரத்தை தென்னை மற்றும் மரவள்ளி பயிர்களுக்கும் பயன் படுத்தலாமா,அல்லது அனைத்து வகையான பயிர்களுக்கும் பயன்படுத்தலாமா?

Share Reply

organic farming organic fertilizer amul farmers

Get 30 days free Trial on App

## கவர் ஸ்டோரி



மாதம் ரூ.1,29,000... 12 வகையான கீரைகள்... நேரடி விற்பனை... அசத்தும் ஐ.ஐ.எம் பட்டதாரி!

அரவிந்த்பிரசாத்

## ஆசிரியர் பக்கம்

20 ஆண்டுகள் கடந்தும்... மின் இணைப்புக்காக காத்திருக்கும் விவசாயிகள்!

ஆசிரியர்

play

## நாட்டு நடப்பு



அமெரிக்காவிலிருந்து நீண்ட உதவிக்கரங்கள்... கரூரில் ததும்பி நிற்கும் நீர் நிலைகள்...

துரை.வேம்பையன்

Get 30 days free Trial on App



ஆண்டுக்கு ரூ.15 லட்சம்; வாழை பிஸ்கட், வாழை அப்பளம்; மதிப்புக்கூட்டலில் அசத்தும் மகாராஷ்டிரா விவசாயி!

மு.ஐயம்பெருமாள்



மலைப் பகுதிகளில் மேய்ச்சலுக்குச் சட்டம் அனுமதிக்கிறது… அதிகாரிகளோ அவமதிக்கிறார்கள்…

தி.பெருஞ்சித்திரன்



சவுக்கு சாகுபடியில் ரூ.6 லட்சம்... இயற்கைக்கு மாறும் நெதர்லாந்து... களையைக் கட்டுப்படுத்தும் அசோலா!

பெ.கார்த்திகேயன்



மானாவாரிக்கு டிஎம்வி.2; இறவைக்கு டிஎம்வி.13; எண்ணெய் வித்துச் சாகுபடி; வழிகாட்டும் ஆராய்ச்சி நிலையம்

Get 30 days free Trial on App

ஜெயகுமார்.த



அமுல் நிறுவனத்தின் இயற்கை உரங்கள்... மஞ்சள் சாகுபடியில் பரிசோதனை!

ம.பா.இளையபதி

## மகசூல்



மாதம் ரூ.30,000... 90 சென்டில் ஓர் அடர்வனம்... அரிய வகை மரங்கள், காய்கறிகள், மூலிகைகள்!

செ.சிவரஞ்சனி



3 ஏக்கர், ரூ.20 லட்சம்... மதிப்பு வாய்ந்த மரங்கள்... மணம் வீசும் பழங்கள்...

ஜெயகுமார்.த

Get 30 days free Trial on App



ஏக்கருக்கு ரூ.1 லட்சம் ... நிலக்கடலை, நெல் சாகுபடியில் அசத்தும் ராணுவ வீரர்!

மு ஜெயமோகன்ஸ்ரீராஜன்



ரூ.58,000... குதிரைவாலியில் குதூகலமான மகசூல்… மதிப்புக்கூட்டினால் கூடுதல் லாபம்!

இ.கார்த்திகேயன்

## மாத்தியோசி



மாடித்தோட்டத்தில் எறும்புகளை கட்டுப்படுத்த அருமையான யோசனை... மறந்துபோன கசப்புச் சுண்டைக்காய்

Guest Contributor

## தொடர்கள்

Get 30 days free Trial on App




வானில் நடக்கும் தேனிலவு... வால் நடனம் மூலம் அறிவிப்பு... இது தேனீக்களின் அதிசய அரசாங்கம்!

நீ.செல்வம்



கஜா புயல் கற்றுத் தந்த பாடம்… தென்னை மரங்களின் உறுதியை அதிகரிக்கும் வழிமுறைகள்…

செந்தூர்குமரன்



கொட்டகை, பசுந்தீவன உற்பத்தி... 30 ஆடுகள் வளர்க்க... லாபகரமான ஆலோசனைகள்!

ஸ்ரீனிவாஸ் ஆச்சார்யா

## கேள்வி-பதில்



குளியலறை தண்ணீரை, வீட்டுத்தோட்டத்துக்குப் பயன்படுத்தலாமா?

Get 30 days free Trial on App

Guest Contributor

## அறிவிப்பு

**பசுமை ஒலி**

பசுமை விகடன் டீம்

**பசுமை சந்தை**

பசுமை விகடன் டீம்

**தண்டோரா**

பசுமை விகடன் டீம்

## மரத்தடி மாநாடு!

Get 30 days free Trial on App



**இறந்துபோன கால்நடைகள்... மீட்டெடுக்கப்பட்ட நீர்நிலை புறம்போக்கு நிலம்!**

பசுமை விகடன் டீம்


**Email:** webmaster@vikatan.com

**Phone:** 044-66802939 (Mon - Fri)



Download on the App Store
Download on the Play Store


Vikatan.com
Digital Subscription
Ebooks
Print Books

About us
Contact us
Terms & conditions

Follow US


Download on the App Store
Download on the Play Store



© vikatan 2025. All Rights Reserved

Get 30 days free Trial on App